இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 15 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 09 – திங்கள்கிழமை 25 ஆகஸ்ட் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 15 : Thiruvalluvar Year - 2056 - Aavani 09 - Monday 25 August 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

# கல்வியை வளர்க்கும் காலை உணவுத் திட்டம்!

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று போற்றுகிறது பழந்தமிழ் இலக்கியம். அதனால்தான், பள்ளிகளில் குழந்தைகளுக்கு உணவு வழங்குவது என்பதை முக்கியமான திட்டமாக ஒரு நூற்றாண்டுக்கு முன்பே செயல்படுத்தியது திராவிட இயக்கமான நீதிக்கட்சியின் நிர்வாகத்தில் இருந்த சென்னை மாநகராட்சி மன்றம். அதன் தலைவராக இருந்த நீதிக்கட்சியின் நாயகர் திரு. பிட்டி. தியாகராயர் அவர்கள் 16-9-1920 அன்று மாணவர்களுக்கு உணவு வழங்கும் தீர்மானத்தை நிறைவேற்றி அதனடிப்படையில் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். பின்னர் அது, சென்னையின் மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட்டது.

பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மாணவர்களின் பசி தீர்க்கும் வகையில் மதிய உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஏழைக் குடும்பத்து மாணவர்கள் பெரும் பயனடைந்தனர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில் அது சத்துணவுத் திட்டமாக மாற்றப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் முட்டையுடன் கூடிய நிறைவான சத்துணவுத் திட்டமானது. மாணவர்களின் உடல்நலன் மேம்பட்டது. 'பசியாத நல்வயிறு' என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிட்டது போல, பள்ளிக் குழந்தைகள் பசியுடன் இருக்கக் கூடாது என்பதற்காக மதிய வேளையில் உணவு வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முன்னோடி மாநிலம்.

**தனிமனித வருவாயிலும் பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேற்றம் கண்டுள்ள தமிழ்நாட்டில், பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்லும் சூழல் நகர்ப்புறங்களில் மட்டுமின்றி கிராமப்புறங்களிலும் உள்ளது. அவர்கள் பணிக்குச் செல்லும் நேரத்தில், பள்ளிக்குச் செல்லும் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான அளவில் காலை உணவை வழங்க முடியாத நிலையையும் பல இடங்களில் காண முடிந்தது. அதன் காரணமாக, காலை நேரத்தில் பள்ளிக் குழந்தைகள் உடல் சோர்வினால், படிப்பில் ஆர்வம் காட்ட முடியாத நிலையும், உடல்நலன் கெடக்கூடிய ஆபத்தும் இருப்பதை உங்களில் ஒருவனான நான், ஒரு பள்ளிக்குச் சென்றபோது அதனை நேரில் கண்டதும், இதற்குத் தீர்வு காண வேண்டும் என்று உறுதியெடுத்ததன் விளைவுதான், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.**





திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு சிறப்புமிக்க திட்டமான இதுகுறித்து சட்டப்பேரவையில் விதி 110இன்கீழ் 7-5-2022 அன்று உங்களால் முதலமைச்சரான உங்களில் ஒருவனான நான் அறிவித்தேன். சொன்னதைச் செய்து காட்டுவது தானே முத்தமிழறிஞர் கலைஞர் நமக்கு வகுத்துத் தந்திருக்கிற அரசியல் இலக்கணம். அதன்படி, திராவிட இயக்கத்தின் முதல் அரசியல் பிரிவான நீதிக்கட்சியின் நிர்வாகத்தில், பள்ளியில் மதிய உணவு வழங்குவதற்காக சென்னை மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 16-9-1920இல் இருந்து சரியாக 102 ஆண்டுகள் நிறைவடைந்த நாளில், 15-9-2022 அன்று பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் பிறந்தநாளில் மதுரையில் ஆதிமூலம் மாநகராட்சித் தொடக்கப் பள்ளியில் காலை உணவுத் திட்டத்தினைத் தொடங்கி வைத்து, மாணவக் குழந்தைகளுடன் அமர்ந்து, சாப்பிட்டு மகிழ்ந்தேன். பிள்ளைகளின் வயிறு நிறைந்தது. எனக்கு மனது நிறைந்தது.

**இந்தத் திட்டத்தின் நோக்கம், மாணவர்கள் பசியுடன் பள்ளிக்கு வரக்கூடாது என்பதுதான். மதிய உணவு நேரம் வரை அவர்கள் சத்துணவுக்காகக் காத்திருக்காமல், காலையிலேயே சத்தான உணவைச் சாப்பிட்டு, பாடங்களைக் கற்று, மதியம் சத்துணவு சாப்பிடச் செல்ல வேண்டும் என்பதும், இதன் மூலமாக, ஊட்டச்சத்து குறைபாடின்றி அவர்கள் ஆரோக்கியமாக வளரவும், அவர்களின் வருகை தடைபடாமல் இருக்கவும் செய்வதுடன், அந்தக் குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைப்பதும் காலை உணவுத் திட்டத்தின் குறிக்கோளாக அமைந்தது. முதற்கட்டமாகத் தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் 1545 தொடக்கப் பள்ளிகளில் 1,14,095 குழந்தைகள் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.**

காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகளும் பயன்களும் எப்படி இருக்கின்றன என்பதைத் தொடர்ந்து கண்காணித்து வந்தேன். குழந்தைகளுக்கு என்ன வகையான ஊட்டச்சத்துகள் தேவை, அவர்கள் என்ன விதமான உணவை விரும்புகிறார்கள். சத்தும் ருசியும் கலந்த உணவு வழங்கப்படுகிறதா என்கிற ஆய்வுகளை மேற்கொண்டு, காலை உணவுத் திட்டத்தினால் பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை கூடியிருப்பதையும், தாய்மார்கள் தங்கள் பணிச்சுமை குறைந்த மகிழ்ச்சியுடன் பிள்ளைகளைத் தொடர்ச்சியாகப் பள்ளிக்கு அனுப்புவதையும் அறிந்து கொண்டேன். அடுத்த கட்டமாக, 2023 ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாளன்று மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள 433 அரசு தொடக்கப் பள்ளிகளில்

**உங்களில் ஒருவனான நான் முதலமைச்சர் என்ற முறையில் மேற்கொள்ளும் பயணங்களின் போது, அங்குள்ள தொடக்கப் பள்ளிகளுக்கு நேரில் சென்று, உணவின் தரத்தையும் சுவையையும் பரிசோதித்ததுடன், பிள்ளைகளிடமும் அது பற்றி கேட்டறிந்தேன். நல்ல விளைவுகளை நேரில் அறிந்ததால், இதனை அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் செயல்படுத்திடத் தீர்மானித்தது நமது திராவிட மாடல் அரசு.**



56 ஆயிரத்து 160 மாணாக்கர்கள் பயன் பெறும் வகையில் காலை உணவுத் திட்டம் விரிவாக்கப்பட்டது.

உங்களில் ஒருவனான நான் முதலமைச்சர் என்ற முறையில் மேற்கொள்ளும்

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

### "இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம்" – நீதியரசர் குரியன் ஜோசப்!

# 'மத்திய அரசு' என்ற வார்த்தையே அரசியல் சட்டத்தில் இல்லை!

### தேசியக் கருத்தரங்கில் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி செலமேஸ்வர் பேச்சு!

சென்னை, ஆக. 25 -

சென்னை கலைவாணர் அரங்கில் ஒன்றிய மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். ஒன்றிய - மாநில உறவுகள் குறித்து உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் அறிமுக குறிப்புரை வழங்கினார்.

உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி செலமேஸ்வர், 'கூட்டாட்சியும் அதிகாரப் பரவலும்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

தொகுதி சீரமைப்பு மற்றும் தேர்தல் குறித்து டெல்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.பி.ஷா, குடியரசுத்தலைவர் மற்றும் ஆளுநர்களின் பங்கு குறித்து தேசிய நீதித்துறை அகாடமியின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜி.மோகன் கோபால், மொழி, கல்வி, சுகாதாரம் என்ற தலைப்பில் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் அசோக் வர்தன் ஷெட்டி ஆகியோர் உரையாற்றினர்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம் வரவேற்புரை ஆற்றினார்.



உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் குரியன் ஜோசப்!

ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கில் பேசிய உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப், இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என அரசியல் சட்டம் தெளிவாக குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த மறு ஆய்வு செய்ய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முடிவு செய்துள்ளதை வரவேற்பதாக கூறினார்.

இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என அரசியல் சட்டம் தெளிவாக குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், ஜனநாயக நாட்டில், மக்களும் ஒன்றிய அரசும் பங்குதாரர்களாக இருக்க வேண்டும் என்றும் கூறினார்.



உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி செலமேஸ்வர்!

நமது அரசியல் சாசனம் கூட்டாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டது.

இந்நிகழ்ச்சியில் பேசிய உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி செலமேஸ்வர், இந்தியாவின் அரசியல் சாசனம் கூட்டாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டது எனத் தெரிவித்தார். இந்திய அரசியல் சாசனத்தினால் மட்டுமே இந்தியாவின் பல சமஸ்தானங்களை ஒன்றாக இணைக்க முடிந்ததாகவும் அவர் கூறினார். நாட்டின் இறையாண்மை என்பது அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதாகவே உள்ளது என்றும் உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் ஒன்றிய அரசு நிர்வாகத்தின் ஒருபகுதி அல்ல, அவை சுயேட்சையானவை என்றும் கூறிய நீதிபதி செலமேஸ்வர், ஒன்றிய அரசின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்றும் அதனை விரைவில் நிறைவேற்றுவது அனைவருக்கும் நல்லது என்றும் தெரிவித்தார்.

காடுகளின் நிர்வாகம் 3வது பட்டியலுக்கு மாற்றப்பட்டது வேடிக்கை. காடுகளை நிர்வகிப்பதற்கு ஒரு மாநில அரசால் முடியாதா? கல்வியும் இதே போல் மாற்றப்பட்டது "மத்திய அரசு" என்ற வார்த்தை அரசியல் சாசனத்தில் இல்லை "மத்திய அரசு" என்பது வெள்ளையர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட 1935 ஆம் ஆண்டு சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒன்றிய- மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கம் ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கின் 2ம் அமர்வு நேற்று பிற்பகல் நடைபெற்றது. இதில், கேரள மாநில முன்னாள் நிதியமைச்சர் டாக்டர் தாமஸ் ஐசக், தேசிய பொது நிதி மற்றும் கொள்கை நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் எம்.கோவிந்தராவ், தமிழ்நாடு திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர் பேராசிரியர் நாகநாதன், மூத்த வழக்கறிஞர் சஞ்சய் ஹெக்டே, தமிழ்நாடு நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு உள்ளிட்டவர்கள் உரையாற்றினர்.

## செப்டம்பர் 3,4ல் கூடுகிறது ஜி.எஸ்.டி. கவுன்சில்!

புதுடெல்லி, ஆக. 25 -

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையிலான உயர் அதிகாரம் கொண்ட ஜி.எஸ்.டி. கவுன்சில் செப்டம்பர் 3, 4ஆம் தேதிகளில் கூடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 2 நாள் கூட்டம் டெல்லியில் நடைபெறும் என்றும் ஜி.எஸ்.டி. கவுன்சில் செயலகம் தெரிவித்துள்ளது. தற்போது உள்ள 5, 12,18, 28 சதவீத ஜி.எஸ்.டி.யை இனி 5 மற்றும் 18 ஆக மாற்றவும், எல்.ஐ.சி., ஹெல்த் இன்சூரன்சிற்கு ஜி.எஸ்.டி.யை ரத்து செய்யவும் இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட உள்ளது.

இதில் அனைத்து மாநில நிதியமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்.

## குஜராத்தில் 2 முறை நிலநடுக்கம்!

காந்திநகர், ஆக. 25 -


குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் ஆக. 22 அன்று இரவு 10.12 மணியளவில், 2001 நிலநடுக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பச்சாவ் நகருக்கு அருகே 3.4 ரிக்டர் அளவில் முதல் நில நடுக்கம் பதிவானது. மக்கள் இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள், சரியாக 7 நிமிடங்கள் கழித்து, இரவு 10.19 மணியளவில் ராப்பர் நகருக்கு அருகே 2.7 ரிக்டர் அளவில் இரண்டாவது நில நடுக்கம் ஏற்பட்டது.

இந்த அடுத்தடுத்த நில அதிர்வுகளால் மக்கள் பீதியடைந்தனர். இருப்பினும், இந்த இரண்டு நில நடுக்கங்களாலும் எந்தவிதமான உயிர்ச் சேதமோ, காயங்களோ அல்லது குறிப்பிடத்தக்க பொருட் சேதமோ ஏற்படவில்லை என மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணைய அதிகாரிகள் உறுதிப் படுத்தியுள்ளனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

940

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

135





'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

"மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி" என கழகத்தினருக்கு வழிகாட்டினார் பேரறிஞர் அண்ணா. அவரது கொள்கைப் பாதையில் பயணிக்கும் தமிழ்நாடு அரசு, மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக உருவாக்கிய திட்டம்தான் 'உங்களுடன் ஸ்டாலின்'.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் - திட்டங்கள் அவர்களின் வீட்டுக்கு அருகிலேயே சென்று வழங்குவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம்.

'அரசு சேவைகளை, பொதுமக்களுக்கு மிக விரைவாகவும் எளிதாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் கொண்டு சேர்ப்பதற்காக 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் தொடங்கப்படும்' என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார். அதன்படி, 'முதல்வரின் முகவரி' துறை வழியே செயல்படுத்தப்படும் வகையில், விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, ஜூலை 15-ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தை சிதம்பரத்தில் தொடங்கி வைத்தார். 2025 ஜூலை முதல் நவம்பர் வரை பத்தாயிரம் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளன. நகரப் பகுதிகளில் 3,738 இடங்களிலும், கிராமப் பகுதிகளில் 6,232 இடங்களிலும் முகாம் நடைபெறவுள்ளது.

### 45 நாட்களில் தீர்வு

நகர்ப்புறப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 13 துறைகள் 43 சேவைகள், கிராமப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 15 துறைகள் 46 சேவைகள் என மக்கள் எளிதாகப் பயன்பெறும் வகையில், திட்டமிடப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க, சமூகப் பாதுகாப்புத் திட்ட இயக்குநர், கணினி இயக்குநர்கள் போன்றோருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தினமும் வெவ்வேறு இடங்களில் 6 முகாம்கள் நடத்தப்படும். முகாம்கள் நடக்கும் தகவல்களை 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் உள்ள இணையதளத்தில் அறிந்துகொள்ள முடியும். தன்னார்வலர்கள் வழியாகவும், பொது மக்களுக்குத் தகவல் கொண்டு சேர்க்கப்படுகிறது.

இந்த முகாம்களில் மகளிர் உரிமைத் தொகைக்கு விண்ணப்பம் செய்வதற்கு, ஒவ்வொரு முகாமிலும் 4 வரிசைகள் அமைக்கப்படுகின்றன. ஆதார் சேவைக்கு 30 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.




### மக்களின் கோரிக்கைகள்

'முதல்வரின் முகவரி' துறை மூலம், கடந்த நான்கு ஆண்டுகளில், ஒரு கோடியே 5 லட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அதில் 30.06.2025 வரை ஒரு கோடியே ஒரு இலட்சம் மனுக்களுக்குத் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. இந்தக் கோரிக்கை மனுக்களைப் பரிசீலனை செய்ததன் அடிப்படையில், 'பொதுமக்கள் பல்வேறு திட்டங்களில் பயனடைவதற்காக நிறைய அலுவலகங்களுக்கும், மாவட்ட அளவிலான அலுவலகங்களுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. இதனால், நிறைய சிரமத்துக்கு ஆளாகின்றனர் என்பதை அறிந்த அரசு, மக்களைத் தேடிச்சென்று, அவர்களுக்கு அருகாமையிலேயே அரசின் சேவைகளைத் தர வேண்டும் என்ற நோக்கத்துடன் 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டத்தை 2023-ஆம் ஆண்டு தொடங்கியது.

இந்தத் திட்டம் சென்னை உள்ளிட்ட அனைத்து நகரப் பகுதிகளிலும், கிராமப்புறங்களிலும் 2023 நவம்பர் முதல் 2024 ஜனவரி வரையிலும் 2024 ஜூலை முதல் செப்டம்பர் வரையிலும் நடைபெற்றன. மூன்றாம் கட்டமாக 2025 ஜனவரி முதல் ஜூன் 30 வரை நடைபெற்றது.





இந்த முகாம்களில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்ததில், பட்டா மாற்றம், மின்னிணைப்பு பெயர் மாற்றம், வரி உரிமம் அனுமதி, குடும்ப அட்டை முகவரி மாற்றம் போன்ற கோரிக்கைகளுடன் சமூகநலப் பாதுகாப்புத் திட்டம், ஓய்வூதியம், இலவச வீட்டுமனை பட்டா ஆகிய கோரிக்கைகள், முதன்மையான 10 கோரிக்கைகளாக இருந்துள்ளன.

இதையடுத்து மக்கள், கோரிக்கையாக வைக்கும் அரசு சேவைகள் அனைத்தும், ஒரே இடத்தில் கிடைப்பதுபோலவும், மக்கள் அரசு அலுவலகங்களுக்குச் செல்லாமல், அவர்களுக்கு அருகிலேயே கிடைப்பதுபோலவும், முகாம்கள் நடத்த வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் ஆணையிட, 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

### தன்னார்வலர்கள் ஈடுபாடு

முகாம் நடைபெறும் தகவல், தன்னார்வலர்கள் மூலம் ஒவ்வொரு கிராமத்துக்கும் தெரிவிக்கப்படுகிறது. இதற்காக ஒரு லட்சம் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். மக்கள் எந்தத் துறைக்கு விண்ணப்பம் செய்திருந்தாலும், அதற்காக கொண்டு வர வேண்டிய ஆவணங்கள் என்ன என்பதைத் தன்னார்வலர்கள் முன்கூட்டியே மக்களிடத்தில் விளக்குகின்றனர்.



> "திட்டத்தை முடக்க நீதிமன்றம் வரை சிலர் சென்றபோது, உறுதி குலையாமல் வென்று வந்தது 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம்."

10,000 மக்கள்தொகைக்கு ஒரு முகாம் நடத்தப்படுவது, இந்தியாவிலேயே புதிய நடைமுறையாக உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் பெரும் வெற்றிபெற்றுள்ளது. அனைத்து அரசுத் துறைகளும் ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் நடத்தப்படுவது 'மக்களுக்கான அரசு' என்பதற்கான சான்றாக உள்ளது. திட்டத்தை முடக்க நீதிமன்றம் வரை சிலர் சென்றபோது, உறுதி குலையாமல் வென்று வந்தது 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம்.

...சாதனை தொடரும்



## இளைஞர் அணியின் வரலாற்றை விவரிக்கும் 'தாய்ப்பயணம்'!

1980-ஆம் ஆண்டு மதுரை, ஜான்சி ராணி பூங்காவில், 5,000 உறுப்பினர்களுடன், கழகத்தின் இன்றைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட தி.மு.கழக இளைஞர் அணியானது, இளைஞர் அணிச் செயலாளராக மாண்புமிகு துணை முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் நிலையில், 5 லட்சம் நிர்வாகிகள் கொண்ட பிரமாண்ட இயக்கமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தில் முதன்முதலில் இளைஞர் அணியைக் கட்டமைத்த கழகம் என்ற பெருமிதத்துடன், தி.மு.கழக இளைஞர் அணி, தற்போது 46-வது ஆண்டை எட்டியிருக்கிறது. சோதனைகள் ஏற்பட்ட காலங்களில் எல்லாம் இயக்கத்தை மீட்டுருவாக்கம் செய்யும் முதன்மை அணி என்ற பெருமையும் இளைஞர் அணிக்கு உண்டு. தி.மு.கழகத்தை நோக்கி வரும் இளைஞர்களை கருத்தியல் ரீதியாக கூர்தீட்டும் பணியையும் இடைவிடாமல் செய்யும் அணி இளைஞர் அணி.

அந்த வரலாற்றை இயக்கத்தினரும், தமிழ்நாட்டு மக்களும் அறிந்துகொள்வதற்காக உருவாகியிருக்கும் நூல் 'தாய்ப்பயணம்'. கழக இலக்கிய அணியின் இணைச்செயலாளர் ஈரோடு இறைவன் அவர்கள் இந்நூலை இரண்டு பாகங்களாக எழுதியுள்ளார். ஆழமான வரலாற்றுத் தகவல்களை, நேர்த்தியாகக் கோர்த்து, அரசியல் ஆர்வம் உள்ள எவரையும் வாசிக்கத் தூண்டும் வண்ணம் இந்நூலை எழுதியிருக்கிறார்.

நக்கீரன் பப்ளிகேஷன்ஸ் இந்நூலை வெளியிட்டுள்ளது. இரண்டு பாகங்களும் சேர்த்து 475 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## ஃப்ளாஷ்பேக்



### புதுச்சேரியில் தலைவருக்கு வரவேற்பு!



செ.நடராஜன்

2011-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தையொட்டி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் புதுச்சேரி வழியாக திருவாரூர் சென்றபோது, புதுச்சேரியில் உள்ள ஓட்டல் அண்ணாமலையில் சிறிது நேரம் ஓய்வெடுத்தார். அப்போது, தலைவர் அவர்களை சந்தித்து வரவேற்பு அளித்து, வாழ்த்துப் பெற்றேன். உடன் புதுச்சேரி கழக நிர்வாகிகள்.

**– செ.நடராஜன், கழகத் தொகுதிச் செயலாளர், நெல்லித்தோப்பு தொகுதி, புதுச்சேரி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

**கருவூலம்**

### உழவர் உரிமை நாள்!

1961-ஆம் ஆண்டு செப்டம்பர் 25-ஆம் நாள் 'உழவர் உரிமை நாள்' கொண்டாடியது கழகம். நில உச்சவரம்புச் சட்டத்தில் குறைந்த அளவு 30 ஏக்கர் என்பதை 15 ஏக்கர் என்று மாற்றவேண்டும் என்று தி.மு.க. கோரியது. சட்டத்தின் குறைபாடுகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல சட்டமன்றத்தின் முன் 28.09.1961 அன்று காலை 8 மணிக்கு, கழகத் தொழிற்சங்கச் செயலாளர் ஏ.கோவிந்தசாமி தலைமையில் பேரணி நடத்தப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131